வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். உபரி நிதி இருக்கின்ற காரணத்தினால் தஞ்சை மாவட்டத்திலே இன்னும் பல கிணறு களை ஏற்படுத்தலாம்.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்படுவதைப் போன்று மற்ற மாவட்டங்களிலேயும் வறட்சி நிலையைக்கருத்திலே கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயன் கொடுக்கிற முறையிலே இந்தத் திட்டத்தை செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஆவன செய்யும்.

உத்ரமேரூர் ஏரி மராமத்துப்பணி.

*வினா எண். 1058- திரு. எஸ். ஜகத்ரட்சகன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் ஏரியை விஸ்தரிப்பு செய்து ஆழப் படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) உத்திரமேரூர் ஏரியை விரிவுபடுத்தும் திட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றும், முன்னுரிமை பெற்ற திட்டங்களின் மீது ஆய்வுகள் முடிவுற்றபின், உத்திரமேரூர் ஏரியை விரிவுபடுத்தும் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுக்காலமாக ஆழப்படுத்தப்படாத ஏரிகளை, இந்த வறட்சியைப் பயன்படுத்தி, அனைத்து ஏரிகளையும் ஆழப்படுத்து வதற்கு செயலாக்கத்திட்டம் நிறைவேற்றப்படுமா? மத்திய அரசு கொடுக்கவேண்டிய பணம் தமிழ்கத்திற்குக் கொடுத்து விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை).

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உத்திரமேரூர் ஏரியின் கொள்ளளவு எவ்வளவு? எத்தனை ஏக்கர்கள் அதன் மூலம் பாசன வசதி பெறப்படுகிறது? இந்தத் திட்டம் காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஏரியைப் பயன்படுத்தி 4978 ஏக்கர் பாசன வசதி பெற்று வருகிறது. அதனுடைய கொள்ளளவு 958 மில்லியன் கன அடி. அதிலே 351 மில்லியன் கன அடி கொள்ளளவை அந்த ஏரி இழந்திருக்கிறது. திரும்ப அதை எடுத்துச் செய்யலாம் என்று நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்திலே நடுத்தர பாசனத் திட்டத்தை பெரிய அளவிலே செய்யவேண்டுமென்று கருதிய காரணத்தினால் ஏற்கனவே 29.50 லட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு செயல்படுகிறபோது பெரிய அளவிலே செய்யவேண்டிய நிலைமை இருப்பதால் அவ்வாறு செய்யலாம் என்று அரசு கருதியிருக்கிறது.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : தலைவர் அவர்களே, இந்த உத்திரமேரூர் ஏரி மிகப் பெரிய நீர்ப்பாசன ஏரி. அதனுடைய கொள்ளளவைக் கொண்டு பரப்பளவைக்கொண்டு விரைவாக செயல்படுத்வதிலே இந்த ஆண்டே நிறைவேற்ற கூடிய திட்டம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல் ஒரு அரைஅடி நீர்த் தேக்கத்தினுடைய கொள்ளளவை அதிகப்படுத்தவேண்டும். அதிலே 351.81 மிலியன் கன அடி கொள்ளளவை அது இழந்து இருக்கிறது. அதைப் போக்கவேண்டுமென்று சொன்னால் 242 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவேண்டும். அதற்காக கூடுதலாக 29 அல்லது 34 லட்சம் செலவு செய்யவேண்டுமென்ற முறையிலே திட்டம் தயாரிக்கப்பட்டு 242 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து இவ்வளவு ரூபாய் செலவு செய்தாலும்கூட எதிர்பார்க்கிற பலன் கிடைக்குமா என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேதான் ஏரிகளை நவீனப்படுத்துகின்ற திட்டத்தின் அடிப்படையிலே நீங்கள் சொல்வதைப்போன்று சாதாரணக் கரைகளைக் கட்டுவதாலோ அல்லது கொள்ளளவை அதிகப்படுத்துவதாலோ வராது. 5448 ஏக்கர் பாசன வசதி பெறக்கூடிய நிலைமை இருக்கும். ஆகவே பெரிய அளவிலே செய்யவேண்டுமென்ற கருத்து இருக்கிறது.

[முற்பகல் 9.30]

கங்கைகொண்ட சோழபுரத்திற்கருகிலுள்ள பொன்னேரியை விரிவு படுத்தும் திட்டம்.

*வினா எண். 1059. திரு. பி. தங்கவேலு : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகாமையிலுள்ள பொன்னேரியை விரிவுபடுத்தும் திட்டத்தை அரசு செயல் படுத்துமா?

(ஆ) ஆம் எனில் இத்திட்டத்தை அரசு எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, உடையார்பாளையம் வட்டத்தில் உள்ள பொன்னேரியை விரிவுபடுத்தும் திட்டம் எதுவும் இல்லை என சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடையார்பாளையம் தாலுக்காவிலே பொன்னேரி என்ற ஏரி ஒன்று இருக்கிறது. அங்கே லோயர் அணைக் கட்டிலிருந்து வருஷாவருஷம் இந்த ஆண்டைத் தவிர, வெள்ளக் காலத்திலே அதிகப்படியான நீர் வீணாகக் கடலுக்குச்